Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 187

திங்கட்கிழமை
01 ஜூன் 2026

வைகாசி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## தீக்காயமடைந்த முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 1
தவறுதலாக நெருப்புக்குள் வீழ்ந்து தீக்காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த முதியவர் உயிரிழந்துள்ளார்.
சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த நடராசா செல்வராசா (வயது-85) என்பவரே உயிரிழந்தவராவார்.
கடந்த 29ஆம் திகதி தென்னை ஓலைகளை வெட்டி ஒழுங்கு >>> 11

# நீதித்துறையில் புறத் தலையீடுகள் மக்கள் நம்பிக்கையை சிதைக்கும்

### மேல்நீதிபதி அலெக்ஸ்ராஜா இடமாற்றம் தொடர்பில் யாழ். சட்டத்தரணிகள் சங்கம் அநுரவுக்கு கடிதம்

அமைச்சர், வடக்கு ஆளுநர் மீதும் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 1
நீதித்துறை அதிகாரிகளின் திடீர் மற்றும் விளக்கமற்ற இடமாற்றங்களும், அவற்றில் நிர்வாகத் துறையினரின் தலையீடும், நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும் என்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையீடுகள் இடம்பெற்றுள்ளது என்று சிறிதளவு தோற்றமளிப்பதுகூட மிகக் கடுமையான விடயமாகும் என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. >>> 11

## செம்மணிப்புதைகுழி அகழ்வு இன்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1
செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கையின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. >>> 11

## தற்காலிக நிவாரணங்கள் செப்ரெம்பருடன் நிறுத்தம்

நாணய நிதியத்துக்கு, ஜனாதிபதி உறுதி

விரிவு பக்கம்:-11

## தற்போதைய ஆட்சியாளர்களால் ஆபத்தை நோக்கி நகர்கிறது நாடு

### எச்சரிக்கின்றார் ரணில்



கொழும்பு, ஜூன் 1
தற்போதைய ஆட்சியாளர்களின் தொலைநோக்கற்ற கொள்கைகளால் நாடு மீண்டும் பொருளாதார ஆபத்தை நோக்கி நகர்கின்றது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.
அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் நாட் >>> 11



## இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவி

கொழும்பு, ஜூன் 1
ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு 1.33 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியுள்ளது.
டித்வா புயலால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை >>> 11

## தமிழர் அடையாளமான யாழ். பொதுநூலகம் திட்டமிட்டு எரிக்கப்பட்டு 45 ஆண்டுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 1
தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த பொது நூலகம், சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு எரிக்கப்பட்டு இன்றோடு 45 ஆண்டுகள் ஆகின்றன.
இலங்கையின் முதலாவது மாவட்ட சபைத் தேர்தல்கள் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தன.
தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கையின் பல இடங்களிலிருந்து பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டி >>> 11

## பொது நூலக எரிப்பின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 1
யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பின் 45 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் பொது நூலகத்தினரின் ஏற்பாட்டில், நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இன்று காலை 9 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள நினைவேந்தல் >>> 11



## தற்காலிக விலை உயர்வால் அச்சம் கொள்ள வேண்டாம்!

### அசித நிரோஷன எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 1
உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு மற்றும் சர்வதேச ரீதியிலான சவால்கள் காரணமாகவே உள்நாட்டில் தற்காலிகமாக எரிபொருள் விலைத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அசித நிரோஷன தெரிவித்துள்ளார். >>> 11



## இரண்டாவது கிண்ணம் பெங்களூரின் வசம்!

விரிவு பக்கம்:-12

முச்சந்தி முராரி

"என்னத்தை எரிச்சாலும் எங்கட எண்ணங்களை எரிக்கேலாது கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக ஆபத்தான மட்டத்திலேயே இலங்கைக் கடன் நிலைத்தன்மை!

## 695 மில்லியன் டொலர் விடுவிப்புக்குப் பின் நாணயநிதியம் எச்சரிக்கை




**கொழும்பு, ஜூன் 1**

**சர்வதேச நாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ், இலங்கைக்கு அடுத்தகட்ட தவணையாக 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி அண்மையில் விடுவிக்கப்பட்ட போதிலும், நாட்டின் கடன் செலுத்தும் திறன் மற்றும் கடன் நிலைத்தன்மை இன்னும் மிக ஆபத்தான மட்டத்திலேயே நீடிக்கிறது என சர்வதேச நாணயநிதியம் தனது புதிய அறிக்கையில் எச்சரித்துள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் பிரதி நிர்வாக இயக்குநரும் தற்காலிகத் தலைவருமான கெஞ்ஜி ஒகமுரா இதுதொடர்பில் தெரிவிக்கையில்,

கடன்மறுசீரமைப்பு முடிந்தாலும் ஆபத்து குறையவில்லை. இலங்கையின் தற்போதைய கடன் மறுசீரமைப்பு செயல்முறைகள் இறுதிநிலையை எட்டியுள்ள போதிலும், நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பு இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை.

இலங்கையின் திட்டச் செயற்பாடுகள் ஒட்டுமொத்தமாக வலுவாகக் காணப்பட்ட போதிலும், கடன் நிலைத்தன்மை குறித்த அபாயம் இன்னும் மிக உயர் மட்டத்திலேயே நீடிக்கின்றது.

எனவே, பொருளாதார வளர்ச்சித் திறனை மேம்படுத்துவது தற்போதைய சூழலில் இன்றியமையாததாகும்.

எனவே இலங்கை அரசாங்கம் மின்சாரத் துறை மற்றும் பொது நிதி மற்றும் முதலீட்டு மேலாண்மைகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை உடனடியாக நிறைவு செய்யவேண்டும்.

நாட்டின் நலிவடைந்த பொருளாதார வளர்ச்சியை முடுக்கி விடுவதற்கு, முறையாகத் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட பொது உட்கட்டமைப்பு வசதிகள் மிக அவசியமாகும்.

வரி முறையை மேலும் திறம்பட மாற்றுவதற்கும், அரசாங்கத்தின் வருவாய் ஈட்டலைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் நடுத்தரகால வருவாய் ஈட்டும் மூலோபாயம் ஒன்று அவசரமாக உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# 'ரிக்–ரொக்' பார்க்க கைபேசி தராத தங்கையைக் கொன்ற அண்ணன்

### ஏறாவூரில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 1

'ரிக்ரொக்' பார்ப்பதற்காகத் தங்கை கைப்பேசியைத் தர மறுத்ததால் ஏற்பட்ட ஆத்திரத்தில், 14 வயதுடைய அண்ணன் 11 வயதுடைய தனது உடன்பிறந்த தங்கையைக் கழுத்தை நெரித்துக் கொடூரமாகக் கொலை செய்துவிட்டு, குளியலறைத் தண்ணீர்த் தொட்டிக்குள் சடலத்தை வீசிய சம்பவம் ஏறாவூரில் நடந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகக் குற்றவாளியான 14 வயதுச் சிறுவனை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஏறாவூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சிறுவர்களின் தாயார் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறார். சம்பவ தினத்தன்று பிள்ளைகளின் தந்தை வேலை நிமித்தமாக வெளியே சென்றுவிட்டதால், வீட்டில் அண்ணனும் தங்கையும் மட்டுமே தனியாக இருந்துள்ளனர்.

அவ்வேளையில், தங்கை வைத்திருந்த ஸ்மார்ட்போனை 'ரிக்ரொக்' பார்ப்பதற்கு அண்ணன் கேட்டுள்ளார். அதற்குத் தங்கை பிடிவாதமாகக் கொடுக்க மறுத்ததால், இருவருக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, அது பின்னர் கைகலப்பாக மாறி சண்டை முற்றிய நிலையில் 14 வயது அண்ணன் தனது தங்கையின் கழுத்தை நெரித்ததில் தங்கை உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், தங்கையை இழுத்துச் சென்று குளியலறையில் உள்ள தண்ணீர்த் தொட்டியில் போட்டுவிட்டு அண்ணன் பக்கத்து வீட்டுக்குச் சென்றுள்ளார்.

சிறிது நேரம் கழித்து, வெளியிலிருந்து வீட்டுக்குள் நுழைந்த தந்தை வீட்டில் பிள்ளைகளைக் காணவில்லை எனத் தேடிய போது குளியலறை தண்ணீர்த் தொட்டியில் 11 வயது மகள் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, மகளை மீட்டு, மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார்.

எனினும், அவர் முன்னரே உயிரிழந்ததாக மருத்துவர்கள் தந்தையிடம் தெரிவித்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

14 வயது சிறுவன் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தபோதே சிறுவன் தனது சகோதரியை கொலை செய்தமை தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, சிறுவனைக் கைதுசெய்துள்ள பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

### வித்தியா கொலைவழக்கு

# மரணதண்டனைக் கைதியின் உடல் நீதிமன்ற அனுமதியுடன் அடக்கம்!


யாழ்ப்பாணம், ஜூன் 1

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கொலை வழக்கில், மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதி பூபாலசிங்கம் ஜெயக்குமாரின் உடல் நீதிமன்ற அனுமதியுடன், கோம்பையன் மணல் இந்துமயானத்தில், அரச செலவில் நேற்றுமுன்தினம் அடக்கம் செய்யப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா, பாடசாலையிலிருந்து தனது வீடு திரும்பிக் கொண்டிருந்த போது கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில், கைதான சந்தேகநபர்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் விதித்த மரணதண்டனையிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி, உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடுகள் தாக்கல் செய்தனர். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் ஏற்கனவே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் விதித்த மரணதண்டனையை உறுதிசெய்து இந்த மாதம் 6ஆம் திகதி தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்த நிலையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிப்பதற்காக, மரணதண்டனைக் கைதிகள் அனைவரும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பூபாலசிங்கம் ஜெயக்குமார் கடந்த 24ஆம் திகதி தனது உயிரை மாய்த்துக்கொண்டார். அவரது உடலைப் பொறுப்பேற்பதற்கு உறவினர்கள் மறுப்புத் தெரிவித்தமையால், நீதிமன்ற அனுமதியுடன், சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (க-66)



# மகாநாயக்கர்களின் அனுமதியின்றி அரசாங்கம் முடிவெடுக்கக்கூடாது!

### கூறுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 1

பௌத்த துறவிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பௌத்த சாசனம் தொடர்பான விவகாரங்களில் தற்போதைய அரசாங்கம் தன்னிச்சையாக முடிவெடுக்கக்கூடாது. பாரம்பரிய நடைமுறைகளைப் பின்பற்றி, மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினரிடம் சமர்ப்பித்த பின்னரே இறுதி முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள விசேட உத்தியோகபூர்வ அறிக்கையில்,

பௌத்த துறவிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து நாட்டில் ஒரு குறிப்பிட்ட நீண்டகால நடைமுறை உள்ளது.


இதுதொடர்பான எந்தவொரு அமைச்சரவைப் பத்திரமும் முதலில் மகாநாயக்க தேரர்கள் மற்றும் மகா சங்கத்தினரிடம் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டு, அவர்களின் ஆலோசனைகளும் அனுமதியும் பெறப்பட்ட பின்னரே இறுதி வடிவத்தைப் பெறவேண்டும். நாட்டில் நிலவும் மதப் பாரம்பரியத்தின்படியே அனைத்தும் முன்னோக்கி கொண்டு செல்லப்படவேண்டும்.

தற்போதைய நிர்வாகச் சூழலில், பௌத்த துறவிகள் மற்றும் பௌத்த மக்களின் பாரம்பரியக் கருத்துகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் ஓரங்கட்டப்படும் ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைமையே நாட்டில் காணமுடிகிறது - என்றுள்ளது. (ச-இ)

# பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஜூன் 1

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் டீசல் விலை உயர்த்தப்பட்ட போதிலும், பேருந்துக் கட்டண திருத்தம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதேவேளை ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாவினாலும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவினாலும் உயர்த்தப்படுவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இலங்கையர் ஒருவரால் ஆண்டுக்கு 34 கிலோ சீனி நுகர்வு!

**கொழும்பு,ஜூன் 1**

**இலங்கை மக்களின் நாளாந்த உணவுப் பழக்கத்தில் நச்சுப் பொருளாக மாறிவரும் சீனி நுகர்வானது உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ள ஆரோக்கியமான எல்லையை விடவும் அபாயகரமான முறையில் கணிசமாக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உலக சுகாதார அமைப்பினால் மனித உடலின் ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவோடு ஒப்பிடுகையில்,

ஒரு தனிநபர் வருடத்துக்கு அதிகபட்சமாக 22 முதல் 24 கிலோகிராம் சீனியை மட்டுமே நுகரவேண்டும்.ஆனால், இலங்கையில் தற்போதைய நிலைவரப்படி ஒரு தனிநபரின் வருடாந்த சீனிநுகர்வு 32 முதல் 34 கிலோகிராம் என்ற மிக உயர்ந்த மற்றும் ஆபத்தான மட்டத்தில் காணப்படுகிறது.

இலங்கையின் ஒட்டுமொத்த வருடாந்த சீனித் தேவை சுமார் 6.5 இலட்சம் மெற்றிக் தொன்களாகக் காணப்படுகின்றது. எனினும், இதில் உள்நாட்டு உற்பத்தி மிகமிகக் குறைவு என்பதால், நாடு முற்றிலும் வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள உள்ளூர் சீனித் தொழிற்சாலைகள் மூலம் வருடத்திற்கு வெறும் 56,000 மெற்றிக் தொன்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஒட்டு மொத்தத் தேவையில் வெறும் 8% முதல் 10% வரை மட்டுமேயாகும்.மீதமுள்ள 90 சதவீதத்துக்கும் அதிகமான சீனித் தேவை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்காகப் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து வருடாந்தம் சுமார் 110 பில்லியன் ரூபா என்ற பெருந் தொகை வெளிநாட்டுச் செலாவணியாக விரயமாக்கப்படுகிறது. நீரிழிவு மற்றும் தொற்றா நோய்களின் பெருக்கத்திற்கு வழிவகுக்கும் இந்தச் சீனி நுகர்வைக் கட்டுப்படுத்தவும், அதேசமயம் இறக்குமதிச் செலவைக் குறைத்து உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய, உள்நாட்டுச் கரும்புச் செய்கையை விரிவுபடுத்தி, உள்ளூர் சீனி உற்பத்தியை அடுத்த சில ஆண்டுகளுக்குள் பல மடங்கு மேம்படுத்துவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சு புதியதொரு தேசிய மூலோபாயத் திட்டத்தை கையில் எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது. (ச-இ)

## பெண்ணொருவர் கொலை; கொலையாளி உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஜூன் 1

வெல்லவ, நிக்கதலுபொத்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் இருந்த பெண் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதுடன், அதே வீட்டில் மற்றொரு நபர் உயிர்மாய்த்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர்கள் 49 வயதுடைய பெண் மற்றும் 40 வயதுடைய ஆண் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்கு வாதம் முற்றியதன் காரணமாக, சம்பந்தப்பட்ட நபர் பெண்ணைக் கூர்மையான ஆயுதத்தால் தாக்கிய பின்னர் அவரும் உயிர்மாய்த்துக் கொண்டுள்ளதாகவும் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ச-இ)

## ஆசிய தடகளப் போட்டியில் இலங்கைக்கு 3 பதக்கங்கள்

கொழும்பு, ஜூன் 1

ஹொங்கொங்கில் நடைபெற்று வரும் 22ஆவது 20 வயதுக்குட்பட்ட ஆசிய இளையோர் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை இளம் தடகள அணியினர் 3 பதக்கங்களை பெற்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளனர். அதன்படி பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தின் இறுதிப்போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அசாத்திய வேகத்தில் ஓடிய ரன்சினி பெரேரா தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். ஆண்களுக்கான உயரம்பாய்தலில் இலங்கை வீரர் தருஷ மெந்திஸ் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். இவர் 2.14 மீற்றர் உயரத்தைத் தாண்டி சாதனையைப் படைத்துள்ளார்.

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் சதேவ் ராஜகருணா வெண்கலம் வென்றுள்ளார். (ச-இ)



## கடலில் அள்ளுண்டு சென்ற 3 மாணவர்களின் சடலங்கள் மீட்பு

கொழும்பு,ஜூன்.1

ஹங்கம, களமெட்டிய கடலில் நேற்றுமுன்தினம் மாலை நீராடச் சென்றபோது அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமற் போன பாடசாலை மாணவர்கள் மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் 12, 17 மற்றும் 18 வயதுடைய மூன்று பாடசாலை மாணவர்களின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளனர். தங்காலை காவல்துறை உயிர் காக்கும் பிரிவு, கடற்படையினர் மற்றும் உள்ளூர்வாசிகள் இணைந்து மீட்பு மற்றும் தேடுதல் பணிகளை முன்னெடுத் திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஐ.நா. புலம்பெயர் அமைப்புக்குழு தலைவராகப் பிரசாத் காரியவசம்

கொழும்பு, ஜூன் 1

ஐக்கிய நாடுகளின் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவராக முன்னாள் வெளியுறவுச் செயலாளரும் தூதுவருமான பிரசாத் காரியவசம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஜெனீவாவில் உள்ள பெலஸ் வில்சனில் கடந்த மே 28ஆம் திகதி நடைபெற்ற இந்தக் குழுவின் 42 ஆவது அமர்வில் அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

## இன்றைக்கு ஆர் கூட்டுமுறை?

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்வாய்நாடி வாய்ப்பச் செயல்' எண்டு வள்ளுவர் போற போக்கில சொல்லேலை. ஒராளுக்கு ஏதும் வருத்தம் எண்டால் மேலோட்டமால் அதுக்கு சிகிச்சை குடுக்காமல், அந்த வருத்தத்துக்கு என்ன மூலகாரணம் எண்டதைக் கண்டுபிடிச்சு அதை இல்லாமல் செய்தால் தான் அந்த வருத்தத்தை பூரணமாச் சுகமாக்கலாம்..ரண்டாயிரம் வருசத்துக்கு முதலே வள்ளுவருக்குத் தெரிஞ்ச இந்த மருத்துவ உண்மை, இப்ப இருக்கிற சிலருக்குத் தெரியாமல் போனதுதான் எங்கட கெடுகாலம். அதுவும் வசதி வாய்ப்புகள் இல்லாமல் தவிக்கிற நெடுந்தீவில இப்பிடியொரு வில்லங்கம் பிடிச்ச முறையை பதவிக்கதிரையளில இருக்கிறவை கொண்டுவர வெளிக்கிடுறதுதான் இன்னும் கொடுமை.

ஏற்கனவே நெடுந்தீவில ஆஸ்பத்திரி ஒழுங்கா இயங்கிறேல, டொக்டர்மார் ஒழுங்கா வாறேலை எண்டு சனங்கள் ஒரே முறைப்பாடு. இதால அங்கத்தைச் சனம் சின்னவருத்தம் வந்தால் கூட கடுமையாக் கஷ்டப்பட வேண்டியிருக்குது. அப்பிடிப்பட்ட சனத்துக்கு ஒரே ஆறுதல் அங்க இருக்கிற ஆயுள்வேத நிலையம் தான். அங்க ஆயுள்வேத டொக்டர் ஒருத்தர் இருந்தவர். அவரும் ஒழுங்கா வராட்டியும் ஏதோ இடைக்கிடை வந்தாவது அவையளின்ர வருத்தத்துக்கு மருந்து குடுப்பார். இப்ப அவருக்கு அஞ்சு வருச சேர்விஸ் நெடுந்தீவில செய்ததால இடமாற்றம் வந்திருக்குது. அப்பிடி ஒரு ஆயுள்வேத டொக்டருக்கு இடமாற்றம் எண்டால், அவருக்குப் பதிலா இன்னொரு ஆயுள்வேத டொக்டரை அங்க போடுறதுதான் வழமை. ஆனால் அந்த இடத்திலதான் எங்கட வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் ஒரு ருவிஸ்டை வைச்சிருக்குது.

இப்ப இடமாறிப்போற டொக்டருக்குப் பதிலா இன்டையில இருந்து ஒருநாளைக்கு ஒரு டொக்டர் நெடுந்தீவில இருக்கிற ஆயுள்வேத ஆஸ்பத்திரியில டியூட்டி செய்யவேணும் எண்டு முதலாம் கட்டமா ஒரு லிஸ்ட்டை அனுப்பி இருக்குது. பள்ளிக்கூடங்களில வகுப்பறையை ஒவ்வொருநாளும் எந்தெந்தப் பிள்ளை கூட்டித் துப்புரவாக்க வேணும் எண்டு 'கூட்டுமுறை'போடுறவையெல்லோ. அதைமாதிரி இந்த மாதம் முதலாம் திகதியில இருந்து முப்பதாம் திகதி வரைக்கும் ஆரார் நெடுந்தீவு போகோணும் எண்டு 21 ஆயுள்வேத டொக்டர்மாரின் பேரை வெளியிட்டிருக்கினம். வாறமாதம் இந்த 'கூட்டுமுறை' லிஸ்டில வேற ஆக்களின்ர பேர் வருமாம். இப்பிடி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு டொக்டரும் என்னென்ன திகதி போகவேணும் எண்டு திணைக்களம் லிஸ்ட் விட்டபடி இருக்குமாம். நெடுந்தீவுக்கெண்டு ஒரு ஆயுள்வேத டாக்குத்தரை ஏன் திணைக்களம் போடேலை? அங்கதான் விசயம் இருக்கு. திணைக்களக்காரர் விட்ட ஒரு பிழையால அங்க பதிலீடா ஒருத்தரைப் போடேலாமல் போட்டுதாம். தங்கட பிழையை மறைக்கத்தான் இப்ப சனத்தையும், ஆயுள்வேத டாக்குத்தர்மாரையும் திணைக்களம் வதைக்க முடிவு செய்திருக்காம். திணைக்களம், விட்ட பிழை என்ன? அதால சனத்துக்கும் ஆயுள்வேத டாக்குத்தர் மாருக்கும் என்னென்ன சிக்கல்கள்? எண்டதையெல்லாம் நாளைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com — பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## வைகாசி விசாக உற்சவம்

யாழ்ப்பாணம், ஜீன் 1

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய வைகாசி விசாக உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

சிறப்புப் பூஜை வழிபாடுகள், வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதி வேற்பெருமான் அடியவர்கள் புடைசூழ உள்வீதி, வெளிவீதி உலா வந்தார். (ச-41-66)

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

'பிரஜாசக்தி ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைகள்' எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நடைபெறும். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சரும் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், தெரிவு செய்யப்பட்ட 'வருமானம் குறைந்த 10 குடும்பங்களை இணைத்து காளான் வளர்ப்புத் திட்டம்' என்ற கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும். (க)





## நல்லூரில் வைகாசி விசாகம்

யாழ்ப்பாணம், ஜீன் 1

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வைகாசி விசாக உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. காலை சண்முக திரவிய மகா அபிஷேகம், சண்முக நியாஸம், சகஸ்ர நாம அர்ச்சனை என்பன நடைபெற்றன. மாலை சாயரட்சைப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து இரண்டாம் காலப் பூஜை நடைபெற்றது. வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராக அடியவர்கள் புடைசூழ உள்வீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெற்றது. (ச-41-66)



## யாழ். பல்கலையில் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூன்

வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய ' பத்திரிகைத்துறையில் என்கதை ' எனும் நூல் அறிமுக நிகழ்வு, இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும். ஊடகத்துறை பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, கௌரவ விருந்தினராக, கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.பிரதீபராஜா ஆகியோர் கலந்து கொள்வர். வாழ்த்துரையை பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும், கருத்துரைகளை கணபதி சர்வானந்தா, தெ.மதுசூதனன் ஆகியோரும் ஆற்றுவர். (க)

## நயினாதீவு இறங்குதுறையில் அகற்றப்படும் பாதைப்படகு

யாழ்ப்பாணம், ஜூன் 1

நயினாதீவு இறங்குதுறையில் நீண்டகாலமாக கடலில் தாழ்ந்து காணப்பட்ட, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பாதை பயணப்படகை கரைக்குக் கொண்டுவரும் நடவடிக்கை, இலங்கைக் கடற்படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த படகு கடலில் தாழ்ந்து காணப்படுவதால், அந்தப் பகுதியில் படகுகளை நிறுத்துவதற்கு, படகு உரிமையாளர்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர். எதிர்காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இயக்கப்படவுள்ள புதிய பயணப்படகை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும், இந்தப் படகு தடையாகவுள்ளது. இதுதொடர்பில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், நயினாதீவு படகு உரிமையாளர்கள் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (க)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**இடபம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதியமுயற்சிசாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்ப தற்கு உகந்த நாள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**துலாம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கும்பம்** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# போகின்ற போக்கில்..!

வலிகாமம் வடக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் காலஎல்லைகளைக் குறிப்பிட்டு உத்தரவாதம் வழங்கமுடியாது என வெளிப்படையாகக் கூறியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான இளங்குமரன். வடமாகாணத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, இராணுவப் பிரதானிகள், வடமாகாண ஆளுநர் வேதநாயகன், அமைச்சர் சந்திரசேகர், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் அடங்கிய உயர்மட்டக் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. எனினும் யாழ்ப்பாணத்தில் படையினரின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆக்கபூர்வமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கூறியுள்ள கருத்துகள் மிகவும் முக்கியத்துவம் மிக்கவையாகவே அமை கின்றன.

திசைகாட்டி அரசாங்கத்தில் உள்ளோர் முன்பின் முரணான கருத்துகளை வெளியிட்டு மக்களைத் தொடர்ச்சியாகக் குழப்பி வருவதில் வல்லவர்களாகவே உள்ளனர். மாகாணசபைத் தேர்தல் இந்த வருடம் நடைபெறுமா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் அரசாங்கத்துக்குள் இருவேறு கருத்துகள் நிலவி வருகின்றன. சிலர் தேர்தல் நிச்சயம் நடைபெறும் என்றும், இன்னும் சிலர் இவ்வருடம் தேர்தலுக்கு வாய்ப்பில்லை எனவும் கூறுகின்றனர். இதில் அரசாங்கத்தின் நிலைப்பாடு எதுவென உறுதிப்படுத்த முடியாது மக்கள் திணறி வருகின்றனர். இதன் தொடர்ச் சியாகவே, வலி.வடக்கு காணிகளை விடுவிக்கும் விடயத்திலும் 'திக்குத் திசை' தெரியாமல்'திசைகாட்டி' அரசாங்கம் கருத்துகளை வெளிப் படுத்தி வருகின்றது.

வலிகாமம் வடக்கிலுள்ள காணிகள் ஏப்ரல் மாத இறுதிக்குள் விடுவிக்கப்படும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன என்று அமைச்சர் சந்திரசேகர் முன்னர் கூறியிருந்தார். தனது கருத்தை அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுதிப்படுத்தியுமிருந்தார். ஆனால், மே மாதம் நிறைவடைந்து ஜூன் பிறந்துள்ள போதிலும் காணி விடுவிப்பு என்பது இன்னமும் சாத்தியப்படவே இல்லை. வலிகாமம் வடக்கில் பொதுமக்களின் காணிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கடந்த இரு மாதங்களாக (ஏப்ரல் மத்தியில் இருந்து) மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர் என்றால், அதற்கு அமைச்சர் சந்திரசேகர் கூறிய 'கால உத்தரவாதமே' முதன்மைக் காரணம்.

ஆக, வலிகாமம் வடக்கு காணி விடுவிப்பில் அமைச்சர் சந்திரசேகரின் கருத்துகளையா அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் கருத்துகளையா அரசாங்கத்தின் நிலைப்பாடாக மக்கள் எடுத்துக்கொள்வது. அதிகாரப் பகிர்வு, காணிவிடுவிப்பு, அரசியற்கைதிகளின் விடுதலை, தேர்தல் இவையெல்லாம் தமிழர்களின் உரிமைகளுடனும் உணர்வுடனும் நேரத் தொடர்புடைய நெருக்கமான விடயங்கள். எனவே, போகின்ற போக்கில் எழுந்தமாறாகவும், முன்பின் முரணாகவும் கருத்துகளைத் தெரிவிப்பதையும், எதிர்ப்பார்ப்பை விதைப்பதையும் திசைகாட்டி அரசாங்கத்தினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கடந்த அரசாங்கங்களைக் கடுமையாக விமர்சித்த தேசிய மக்கள் சக்தியினர், அதே அரசுகளின் பாதையில் பயணிப்பதற்காகவா தமிழர்கள் வாக்களித்தனர்?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து**

**பொருள்:** சினம் தோன்றாமல் காத்து, கல்வி கற்று, அடக்கமுடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.




# பொலிஸாரெனக் கூறி இணையவழி மோசடி!



மக்கள் அவதானம்

கொழும்பு, ஜுன் 1

**போக்குவரத்து விதிமீறல்களுக்கான தண்டப்பணத்தைச் செலுத்தவேண்டியுள்ளதாகக் கூறி, இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பெயரில் போலியான குறுஞ்செய்தி களை அனுப்பி முன்னெடுக்கப்படும் இணையவழிப் பணமோசடிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு அவசர அறிவுறுத்தல் விடுத்துள்ளது.**

சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் ஊடாக தனிநபர்களைக் குறிவைத்து இத்தகைய ஏமாற்று வேலைகள் நடப்பதாக பொலிஸாருக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே குறுஞ்செய்தி, மின்னஞ்சல் அல்லது வேறு ஏதேனும் தொடர்பாடல் செயலிகள் மூலமாக வரும் சந்தேகத்துக்கிடமான லிங்குகளை எக்காரணம் கொண்டும் க்ளிக் செய்யவேண்டாம்.

ஏதேனும் இணைப்புக்குள் செல்வதற்கு முன்னதாக, அதனை அனுப்பியவரின் விவரங்களை மற்றும் அந்த இணையப் பக்கத்தின் உண்மைத் தன்மையை நன்றாகப் பரிசீலித்துப் பார்க்கவேண்டும்.

தெரியாத இணைப்புகள் மற்றும் செயலிகள் ஊடாக உங்களது தனிப்பட்ட தகவல்கள், வங்கிக் கணக்கு விவரங்கள், கடவுச்சொற்கள் மற்றும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் தற்காலிக நேரக் கடவுச்சொற்களை யாருடனும் பகிரக்கூடாது. மேற்கண்ட பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பொதுமக்கள் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-இ)

## குஷ் போதையுடன் இருவர் சிக்கினர்!

கொழும்பு, ஜுன் 1

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவினர் அதிரடிச் சோதனையில் ஈடுபட்டபோது பெருமளவிலான 'குஷ்' போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீர்கொழும்பு மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 27 மற்றும் 30 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. இதன்போது, 4 கிலோ கிராம் 104 கிராம் 'குஷ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதுதொடர்பில் விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச-இ)



## மது விற்பனை பெண் கைது!

மட்டக்களப்பு, ஜுன் 1

மட்டக்களப்பு, கல்குடா பகுதியில் சட்டவிரோதமாக பௌர்ணமி தினத்தில் மது பான வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த வீடு ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்றுகையிடப்பட்டு பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, அங்கிருந்து 72 பியர் ரின்கள், 25 மதுபானப் போத்தல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## மோ. சைக்கிள் மோதி பாதசாரி உயிரிழப்பு!

பேராதனை கம்பளை பிரதான வீதியின் கொடபொல பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானதில் அந்த நபர் உயிரிழந்துள்ளார். வீதியைக் கடக்க முயன்ற பாதசாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## மண்மேடு சரிந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுன் 1

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 41 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர் தனது வீட்டுக்கு அருகில் மற்றுமொரு கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக மண்ணை அகற்றிக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நேர்ந்துள்ளது.

மஸ்கெலியா பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை- வைகாசி 19
02.06.2026
சுபநேரம் : 10.22 – 11.52
ராகுகாலம் : 02.52 – 04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்.பல்கலைக்கழக மாநாடு இம்முறை கோயம்புத்தூரில்!

புதுடில்லி, ஜீன்.1

**யாழ்.பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் துறையின் தூயசக்தி வளங்களுக்கான ஆய்வு நிலையத்தின் ஏற்பாட்டில், வருடாந்தம் நடாத்தப்படும் தூய சக்தி மற்றும் சுகாதாரப் பிரயோகங்களுக்கான சர்வதேச ஆய்வு மாநாடு, இம்முறை இந்தியாவின் கோயம்புத்தூரில் நடைபெறவுள்ளது.**

எதிர்வரும் ஜீன் 3ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மாநாட்டில் இலங்கையிலிருந்து சிறப்பு உரையாளர்களாக ஆறு விஞ்ஞானிகளும், இருபதுக்கும் மேற்பட்ட ஆய்வாளர்களும் பங்குபற்றவுள்ளனர்.

மாநாட்டின் முக்கியமான அம்சமாக, இந்தியாவின் விஞ்ஞான மற்றும் தொழிற்றுறை ஆய்வு நிறுவனத்தின் தலைவர் கலாநிதி நல்லதம்பி கலைச்செல்வி தலைமையிலான உயர்மட்டக் கலந்துரையாடல் இடம்பெறும்.

இதில் இந்தியா மற்றும் நோர்வே நாடுகளின் புதுப்பிக்கத்தக்க சக்தி நிறுவனங்களின் முன்னணித் தலைவர்கள் பங்குபற்றுவர். இலங்கையிலிருந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த சக்தி அதிகாரசபையின் தலைவர் கலாநிதி விஜேந்திர பண்டார, தேசிய அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் அசோக குமார், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி, வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா ஆகியோர் சிறப்பு உரைகளை ஆற்றுவர். கோயம்புத்தூர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கலாநிதி பால்ராஜ் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தணிகைச்செல்வன் ஆகியோர் மாநாட்டின் பிரதான ஒருங்கிணைப்பாளர்களாகச் செயற்படுவர். மாநாட்டுக்கு முன்பான நிகழ்வுகளாக, ஐதரசன் ஆற்றல் மற்றும் மேம்பட்ட கருவி நுட்பங்கள் தொடர்பான சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், இந்திய தொழில்நுட்பக் கழகம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன. (க)



## யாத்திரைக்குழுவுக்கு மூன்றாம் கட்ட உதவி

முல்லைத்தீவு,ஜுன்.1

கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிய பாதயாத்திரைக் குழுவினருக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால், ஒரு தொகுதிப் பொருள்கள் மூன்றாம் கட்டமாக வழங்கப்பட்டன. புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் முருகன் ஆலயத்தில் வைத்துக் கடந்த வியாழக்கிழமை, நேரடியாக பொருள்கள் வழங்கப்பட்டன.

பாதயாத்திரையில் பங்குபற்றியுள்ள 110 அடியவர்களுக்கும், 82 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பால் பைக்கற்றுக்கள், சவர்க்கார வகைகள் மற்றும் தண்ணீர்ப் போத்தல்கள் என்பன இதன்போது வழங்கப்பட்டன. (க-66)

## மரண அறிவித்தல்



தோற்றம்
11
09
1959

மறைவு
30
05
2026

### குழந்தைவேலு தவகுலநாதன்

ஓய்வுபெற்ற தபால் அதிபர் (யாழ்ப்பாணம்),
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய பரிபாலன சபை
முன்னாள் பொருளாளர், நாயன்மார்கட்டு சனசமூக நிலைய
உபசெயலாளர்.

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 11, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு தவகுலநாதன் அவர்கள் 30.05.2026 சனிக்கிழமையன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - பவானியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கோணேசன் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தியின் பாசமிகு கணவரும், குலசபாநாதன், சுந்தரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருள்நாயகி, நந்தினி ஆகியோரின் மைத்துனரும், ரோஹிணி, குகபாலன், ஸ்ரீபாலன், சாந்தினி, ஜெயபாலன், சிவபாலன், உமைபாலன், தர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11, அம்பாள் வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**[illegible]**
**077 610 9743**

(க.61562) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம்
12
12
1954

மறைவு
31
05
2026

### சந்திரசேகரம் சிறிகாந்தன்
**(ஓய்வுபெற்ற மாநகரசபை சாரதி)**

கோவிலாக்கண்டி கைதடியைப் பிறப்பிடமாகவும், மந்துவில் மேற்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சிறிகாந்தன் அவர்கள் (31.05.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், சந்திரவதனி, தனலஷ்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), ஆகியோரின் சகோதரனும், மிதிலா (சுவிஸ்), உஷாங்கன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குருபரன் (சுவிஸ்) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (01.06.2026) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரது வீட்டில் நடைபெற்று. முற்பகல் 10.0 மணியள்வில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்துவில் இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: மகள் - மிதிலா**
**மகன் - உஷாந்தன்**
**மந்துவில் மேற்கு, கொடிகாமம்**
**077 675 7537**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிதுனம் ராசியில் இருந்து தனது உச்ச ராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவனமுடன் இருக்க வேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒருவருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




**புறம் சொல்லாத குணமும் பொறாமை இல்லாத மனமும் கொண்ட மேடராசிக் காரர்களே!**

குருபகவான் உங்கள் ராசிக்கு, 4ஆம் இடத்தில் அமர்ந்து பலன் தரப்போகிறார். இதுவரை 3ஆம் வீட்டில் அமர்ந்து பல தடைகளையும், காரியங்களை முடக்கி வைத்திருந்த குருபகவான், இப்போது நான்காம் வீட்டில் அடியெடுத்து வைப்பதால், தன்னம்பிக்கை துளிர்விடும். புது எண்ணங்களும் மனதில் தோன்றும். சவாலான சில விஷயங்களை போராடி வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். என்றாலும் கணவன் -மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். தாயாரின் உடல்நலத்தில் அக்கறை காட்டுங் கள். அவருக்கு சிறு சிறு அறுவை சிகிச்சை செய்வார்கள். நீர், நெருப்பு, மின்சாரம் இவற்றை கவனமாக கையாளுங்கள். கையிருப்புக் கரையக்கூடும். சொந்த பந்தங்களிடம் விட்டுக் கொடுத்துப் போகவும்.

**குருபகவானின் பார்வை பலன்கள்:**

குருபகவான் 8 ஆம் இடத்தைப் பாரப்பதால், பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். சொந்த ஊரில் செல்வாக்குக் கூடும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். அதன் மூலம் ஆதாயமும் கிடைக்கும். குருபகவான் 10ஆம் இடத்தைப் பார்ப்பதால், அலுவலகத்தில் புதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் கிடைக்கும். சிலருக்கு வேறு நிறுவனங்களிலிருந்தும் புதிய வாய்ப்புகள் தேடி வரும். எதிர்பாராத பணவரவு உண்டு. எதிர்ப்புகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். சுபச் செலவுகள் இருக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். யோகா, தியானம் செய்யுங்கள். வீண் விமர்சனங்களை முடிந்தவரையில் தவிர்த்து விடுங்கள்.

31.10.26 வரை மற்றும் 25.01.27 முதல் 26.06.27 வரை குருபகவான் பயணம் செய்வதால் குழந்தையில்லாத தம்பதிக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். விலையுயர்ந்த பொருட்களை கவனமாகக் கையாளுங்கள். பணப் பற்றாக்குறை நிலை ஏற்படும். நண்பர்கள், உறவினர்களுடன் மனஸ்தாபம் வரலாம். கேதுவின் நட்சத்திரத்தில் 31.10.26 முதல் 25.01.27 வரை குருபகவான் செல்வதால் உங்களுக்கு எல்லா வகையிலும் வெற்றி உண்டு. பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். அசுவினி நட்சத்திரக்காரர்களுக்கு அலைச்சல், சோர்வு, காரியத்தடைகள் ஏற்படும். பரணி நட்சத்திரக்காரர்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். புதுவேலையில் அமர்வீர்கள்.

## தொழில் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சுபகாரியங்கள் கைகூடும்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் பாக்யாதிபதியான குருபகவான் தனது நட்சத்திரத்தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டு. சகோ தர வகையில் உதவிகள் கிடைக்கும். பாதகாதிபதியான சனி பகவானின் நட்சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குருபகவான் பயணம் செய்வதால் எடுத்த வேலைகளில் வெற்றி உண்டு. எனினும் அவ்வப்போது வீண் அலைச்சலும், விரயச் செலவுகளும் வரும். தைரியம் மற்றும் அலைச்சல் தரும் புதனின் நட்சத்திரத்தில் 19.08.26 முதல்

உத்தியோகத்தில் புதிய பொறுப்பு கள் அதிகரிக்கும். கணினித் துறையினருக்கு வேறு நல்ல வாய்ப்புகள் அமையும். கலைத்துறையினருக்கு மூத்த கலைஞர்களின் ஆதரவு கிடைக்கும். வதந்திகளில் சிக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது. ஆக மொத்தம் இந்த குருப்பெயர்ச்சித் தடைகளை உடைத்து வெற்றி பெறும் காலமாக அமையும்.



# அநுர அரசாங்கத்திலும் சட்டங்கள் ஒழுங்கில்லை

### ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 1

கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதைப் போன்றே, இன்று நாட்டில் சட்டவிரோதச்செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மக்களால் எதிர்பார்க்கப்பட்ட நீதி, அநுர அரசாங்கத்தின் ஆட்சியிலும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற போராட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் அநுராதபுரத்தில் பௌத்த துறவி ஒருவரால், சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமையைக் கண்டித்தும் பரவலாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிடவேண்டும். சிறுவர், பெண்களைப் பாதுகாக்க வேண்டும்.

கடந்த காலங்களில் என்ன நடந்ததோ, அதனை விடக் கேவலமான செயல்கள் இன்று அரங்கேறுகின்றன. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி கிடைக்கவேண்டும். எவ்வித பாகுபாடுமின்றி சட்டரீதியாக மிகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சட்டம் அனைவருக்கும் சமனாகும். எனவே இந்த விடயத்தில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டும் - என்றார். (க-246)

## ஓட்டோ விபத்து; மூவர் படுகாயம்

திருகோணமலை, ஜூன் 1

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

அதிவேகமாகப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுவிலகி அருகில் இருந்த வயலொன்றில் விபத்துக்குள்ளானது. (ச-இ)

# விசேட கண் சிகிச்சை முகாமில் 312 பேருக்கு கண்புரை சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். போதனா மருத்துவமனையின் கண் சிகிச்சைப் பிரிவின் ஏற்பாட்டில், வெசாக் தினத்தை முன்னிட்டு, கடந்த வாரம் நடத்தப்பட்ட விசேட சிகிச்சையில், 312 பேருக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை கண் மருத்துவ நிபுணர் மருத்துவர் எம். மலரவன், கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் மற்றும் வெளிக்கண் நோய் நிபுணர் மருத்துவர் எஸ். சுஜீவன், சிரேஷ்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் ரி. திலீபன் ஆகியோர் சிகிச்சையை நடத்தினர். தொடர்ந்து 3 நாள்கள் நடத்தப்பட்ட சிகிச்சைக்கு ஐக்கிய இராச்சியம் மற்றும் இலங்கையைத் தளமாகக் கொண்ட Assist Resettlement and Renaissance (Assist RR) அமைப்பு நிதி உதவி வழங்கியது. இதனூடாக அநுராதபுரம் (பதவியா மற்றும் ஹொரரோவ்பொத்தானை), வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த, பின்தங்கிய சமூகங்களுக்குத் தரமான கண் சுகாதார சேவையை வழங்க முடிந்துள்ளது என்று மருத்துவர் எம். மலரவன் தெரிவித்துள்ளார். (க-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 6 மின்கல சேமிப்புக் கட்டமைப்புகள் இலங்கை அரசாங்கம் இறக்குமதி!

கொழும்பு.ஜூன் 1
இலங்கையின் முதலாவது வர்த்தக ரீதியிலான மின்கல எரிசக்தி சேமிப்பு கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், மேலும் 6 மின்கல சேமிப்புக் கட்டமைப்புகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.


மொத்தமாக 160 மெகாவாட் மின்சாரத்தைச் சேமிக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ், புதிதாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள கட்டமைப்புகள் மஹவ, வவுனியா, சுன்னாகம், கிளிநொச்சி, அநுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய பகுதிகளில் உள்ள துணை மின்நிலையங்களுக்கு அருகில் நிறுவப்படவுள்ளன.

இந்த ஒவ்வொரு கட்டமைப்பும் பகல் வேளையில் 40 மெகாவாட் வரையான மின்சாரத்தைச் சேமித்து வைக்கும் திறன் கொண்டவையாகும். இரவு வேளையில் மின்சாரத் துக்கான தேவை உச்சமடையும் சந்தர்ப்பங்களில் இந்த அமைப்புகள் மூலம் தலா 10 மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கமுடியும்.

இதன்படி, புதிய 6 கட்டமைப்புகள் மூலமும் மொத்தம் 60 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் தேசிய மின் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை அதிகரிப்பதுடன், புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாட்டை விரிவுபடுத்தவும், நுகர்வோருக்கு குறைந்த செலவில் மின்சாரத்தை வழங்கவும் வழிவகுக்கும். தற்போது எரிபொருளைப் பயன்படுத்தி ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு சுமார் 115 ரூபா செலவாகிறது. எனினும், புதிய தொழில்நுட்பத்தின் மூலம் இந்தச் செலவை 30 ரூபாவாகக் குறைக்கமுடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் மூலமான மின் உற்பத்திக்காக மாதாந்தம் செலவிடப்படும் வெளிநாட்டு அந்நியச் செலாவணியில், சுமார் 2.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தத் திட்டத்தின் மூலம் சேமிக்க முடியும் என வலுசக்தி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)



## அரிய கடல் சொத்துகளைக் கடத்திய குழுவினர் கைது

கொழும்பு,ஜூன் 1
அரிய வகை கடல் சொத்துகளான பவளப்பாறைகள் மற்றும் கடல் உயிரினங்களைச் சட்டவிரோதமாகக் கடத்தி, பல இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்றவர்கள், விமானப்படை புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர். வனவிலங்கு திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் அதிரடிச் சோதனையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கல்முனை, நீர்கொழும்பு, திருகோணமலை, மாத்தறை மற்றும் தெஹிவளை கடலோரப் பகுதிகளில் இந்த அரிய பவளப்பாறைகள் மற்றும் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை மினுவாங்கொட, களனி மற்றும் வெலிக்கடை பகுதிகளில் விற்க முயன்ற போது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் பறிமுதல் செய்யப்பட்ட உயிரினங்களுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஹொரகொல்ல தேசியப் பூங்கா வனவிலங்கு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (க-இ)


## INVITATION FOR BIDS (IFB)
## IFB No: 2026/05
## VELANAI PRADESHIYA SABHA, VANGALAVADY JUNCTION, VELANAI.

1. The Chairman, Divisional Procurement Committee, on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026-06-01 To 2026-06-15 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.on or before 16.06.2026, 10.30 a.m Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall , Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. Commencing on 08.06.2026 at 11.00 a.m as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026-06-01 To 2026-06-15 |
| Pre-Bid Conference | At 11.00 A.M on 2026-06-08 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 2026-06-16 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period |
| NP/14/41(18)/02/ PSDG/Line Ministry/02/2026 | Improvement of Tourist Facilities at Chaddy Beach in Mankumpan | 2.539 | 60 | C9 or above in Building Construction | 2000.00 | 38,000.00 | 01.09.2026 |

Chairman,
Divisional Procurement Committee (DPC)
Velanai Pradeshiya Sabha,
Vangalavady junction, Velanai.
01.06.2026



## மரண அறிவித்தல்

தோற்றம்
27
10
1942



மறைவு
30
05
2026

### திருமதி.விசாலாட்சி துரையப்பா

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும். கோண்டாவிலையும். கொழும்பு-06. வெவசெட் பிளேசை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி.விசாலாட்சி துரையப்பா அவர்கள் **30.05.2026** சனிக்கிழமையன்று அகால மரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா சிவகொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும். ஆறுமுகம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும். அமரர். ஆறுமுகம்துரையப்பா அவர்களின் அன்பு மனைவியும். சிவதர்ஷினி (ஆசிரியை யாழ் மத்திய கல்லூரி). மயூரன் (உதவி முகாமையாளர்-மில்கோ அரச நிறுவனம்) ஆகியோரின் அன்புத்தாயாரும். பாலகிருஷ்ணன் ( ஆசிரியர் -கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா). சயிலாயினி ஆகியோரின் மாமியாரும். அமரர்களான குமாரசாமி. சங்கரப்பிள்ளை. இலட்சுமணன். சுந்தரலிங்கம். சிவசுப்பிரமணியம். சரோஜினி தேவி மற்றும் அருளம்பலம். தேவராசா. மகேஸ்வரி. தங்கபுஸ்பம். ஜெயகுமார் . சந்திரகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும். அமரர்களான வைத்திலிங்கம். தம்பிராசா. தம்பையா ஆகியோரின் மைத்துனியும். மகிந்தன். அபிதன். சாங்கவி. சயந்தவி ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.
அன்னாரின் ஈமைக்கிரியைகள் **01.06.2026** திங்கட்கிழமை இன்று காலை **8.00** மணி முதல் காலை **10.00** மணி வரை கல்கிசை மகிந்த மலர்சாலையில் நடைபெற்று பின்னர் கல்கிசை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.
**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: குடும்பத்தினர்
இல:11, வெவசெட் பிளேஸ், கொழும்பு- 06
மயூரன்: **0779183714**
சிவதர்ஷினி: **0779073735**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயிலுடன் மோதுண்டு பெண்ணொருவர் சாவு



கொழும்பு, ஜூன் 1 வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில், பாணந்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் அடையாளம் காணப்படாதநிலையில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# 31ஆம் நாள் நினைவு



**அமரர் திருமதி குணபாலசிங்கம் திரேசா ஞானமணி**

**தோற்றம்** 09.11.1953 **மறைவு** 02.05.2026

அன்பினால் என்றும் உம்மை
அகந்தனில் பதிய வைத்தோம்
என்பெல்லாம் உருகுதையோ
ஏங்கியே தவிக்கின்றோமே

இறைவனடியில் புது மலராய்
பாமாலை நிதமும் நீயாவாய்

No.111 ஞானவாசம்
அம்பலவாணர் வீதி,
உடுவில்.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(cs.61561) (N-1)

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 01 . 10 . 1946



**மறைவு** 30 . 05 . 2026

## தருமலிங்கம் அருணகிரிநாதன்

### (ஓய்வுநிலை விஞ்ஞானபாட ஆசிரியர்)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கு மற்றும் வேம்படி வீதியை வதிவிடமாகவும் கொண்ட தருமலிங்கம் அருணகிரிநாதன் அவர்கள் கடந்த 30.05.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் - கமலம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும், அமுதினி, சிவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வவேலின் பாசமிகு மாமனாரும், சேயோன், மயூரன் ஆகியோரின் ஆருயிர் பேரனும், காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, புஸ்பதேவி மற்றும் சிவஞானம், கேதாரநாதன், காலஞ்சென்ற சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் ஞானேஸ்வரி, செல்வலோசனி, காலஞ்சென்றவர்களான நமசிவாயம், புஸ்பராணி மற்றும், யோகமாங்களம், பாக்கியலட்சுமி, இராதாமணி, இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2026) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 613 9016

(cs.61563) (N-1)

# ஆதனஉரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் வடக்குபிரதேசசபை | :- | மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- | திரு. தனபாலசிங்கம் சுரேஸ் |
| விண்ணப்பதாரர் பெயர் | :- | திரு. தனபாலசிங்கம் சுரேஸ் |
| முகவரி | :- | மல்லாகம் கிழக்கு, மல்லாகம் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20, காங்கேசன்துறை வீதியில் ஆதன இலக்கம் 56, 56/8 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, மல்லாகம் இறை "களையிட்டி" என்ற ஆதனங்கள் முறையே திருமதி P.சபாபதி, R. ராஜ் என்ற பெயர் களில் எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

பிரசித்த நொத்தாரிசு காயத்திரி அகிலன் முகதாவில் 2025.02.10ம் திகதியில் 4154ம் இலக்கத்தில் நிறைவேறிய விளம்பல் (ஆதனங்களை ஒன்றிணைத்தல்) உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜா முகதாவில் 2024.01.16 ஆம், 2024.01.05 ஆம், 2024.12.28ஆம் திகதிகளில் முறையே 12917, 12901, 12900, 12891 ஆகிய உறுதிகள் மூலம் ஆதனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு "களையிட்டி" விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பு 07 குளி 11.88 ஆதனம் (நிரந்தரக்கட்டிடமும்) தனபாலசிங்கம் சுரேஸிற்கு சொந்தமாகியுள்ளது. 12900 ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியாக 2005.10.03ம் திகதி பிரசித்த நொத்தாரிசு அமரதாச மாரசிங்க முகதாவில் 9067ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 9067ம் இலக்க உறுதியில் "களையிட்டி" நிலப்பரப்பு 1 குளி 17 விஸ்தீரணமுள்ள ஆதனத்தினை விற்பனை செய்த பற்றிக் சபாபதி என்பவருக்கு நீண்டகால ஆட்சிப்படி குறித்த ஆதனம் சொந்தமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை, கிராமசேவகர் பிரிவு J/214, வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பகுதி, வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு "களையிட்டி" நிலப்பரப்பு 2 (இதன் பதிவு G145/03) மேற்படி இறை "களையிட்டி" நிலப்பரப்பு 01 குளி 17 (இதன் பதிவு G200/52) மேற்படி இறை "களையிட்டி" நிலப்பரப்பு 02 (இதன் பதிவு G 200/50) மேற்படி இறை "களையிட்டி" நிலப்பரப்பு 01 குளி 17 (இதன் பதிவு G200/51) இந்நான்கு ஆதனங்களும் அருகருகே இருப்பதாலும் ஒன்று சேர்க்கக் கூடியதாக இருப்பதாலும் விண்ணப்ப தாரரினால் ஒன்றாக ஆட்சி செய்யப்படுவதாலும் இவை நான்கும் இணைந்து நிலப்பரப்பு 07 குளி 16 இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M. சிற்றம்பலம் 2019.10.16 ஆம் திகதி அளந்து 2019.10.25 ஆம் திகதியிட்டு 4761 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் அளவுப்படி துண்டு 1, துண்டு 2 ஆகக் காட்டப்பட்ட நிலப்பரப்பு ஏழும் (07) குளி பதினொன்று தசம் எட்டு எட்டும் (11.88) நிரந்தரக்கட்டிடமும்

**இதன் எல்லைகள்**

| | | |
|---|---|---|
| கிழக்கு | :- | வழிவாய்க்காலும் T. அருமைநாயகத்தின் 1139 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 9 உம் |
| வடக்கு | :- | 12 அடி அகலப்பாதை |
| மேற்கு | :- | யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் வீதி |
| தெற்கு | :- | கிணறும் தூர்வையும் வழிவாய்க்காலும் இராஜரட்ணம் கைம்பெண் டெய்சியினதும் மறுபேரினதும் ஆதனமும் இவ்வெல்லைப்படி இதடங்கலும் இன்னும் தெற்கெல்லையில் காணப்படும் கிணற்றிலும் தூர்வையிலும் இதற்குரிய பங்கும் படத்தில் காட்டப்பட்டவாறு வழிவாய்க்காலுரித்தும் |

தற்போது இவ்வாதனத்தை தனபாலசிங்கம் சுரேஸ் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் தனபாலசிங்கம் சுரேஸ் எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(cs.61552) A (N-1)

# ஆதனஉரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் வடக்குபிரதேசசபை | :- | மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- | திரு. தனபாலசிங்கம் சுரேஸ் |
| விண்ணப்பதாரர் பெயர் | :- | திரு. முருகையா கோகுலன் (அற்றோனித்தத்துவகாரர்) |
| முகவரி | :- | மல்லாகம் கிழக்கு, மல்லாகம் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20, யாழ்ப்பாணம் வீதியில் ஆதன இலக்கம் 343 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, மல்லாகம் இறை "இயட்டியன்" என்ற ஆதனம் திருமதி S.கந்தையா என்ற பெயரில் எமது ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு காயத்திரி அகிலன் முகதாவில் 2025.02.07ம் திகதியில் 4148ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மல்லாகம் இறையிலுள்ள "இயட்டியன்" நிலப்பரப்பு 09 குளி 13 1/2 விஸ்தீரணமுள்ள ஆதனம் தனபாலசிங்கம் சுரேஸிற்கு அறுதியாக வந்தடைந்துள்ளது.

4148ம் இலக்க உறுதியின் தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு சபாபதிப்பிள்ளை கனகசபாபதி முகதாவில் 7041ம் இலக்கத்தில் 24.04.1972ம் திகதியில் நிறைவேறிய உறுதி மூலம் கந்தையா மகள் சகுந்தலா மற்றும் கந்தையா பாலசுப்பிரமணியம் ஆகியோரிடமிருந்து இராசரத்தினம் வைத்தியநாதரும் பெண் தவமணி ஆகியோரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்ஆதனத்தின் உரித்து தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் ஆதனம் தொடர்பில் முறையான ஆவணங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை, கிராமசேவகர் பிரிவு J/213, வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பகுதி, வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு 'இயட்டியன்" நிலப்பரப்பு ஒன்பது (நிலப்பரப்பு 9) குளி பதின்மூன்றரையும்13 1/2 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் S. சுப்பிரமணியம் 22.12.1963 ஆம் திகதியிட்டு வரைந்த 80 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 1 ஆகக் காட்டப்பட்டுள்ளது.

**இதன் எல்லைகள்**

| | | |
|---|---|---|
| கிழக்கு | :- | செல்லர் கந்தசாமிக்கும் நடராசா பெண் அம்பிகைக்குமுரிய ஆதனங்கள் |
| வடக்கு | :- | நடராசா பெண் அம்பிகைக்கும் மகாலிங்கம் பெண் கணேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள் |
| மேற்கு | :- | யாழ்ப்பாண வீதியும் மேற்படி படத்தில் விடப்பட்ட 2ஆம் துண்டுப்பாதை முகப்பும் |
| தெற்கு | :- | மேற்படி 2 ஆம் துண்டாகிய பாதை நிலத்தால் மேற்கே றோட்டிற்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும் |

தற்போது இவ்வாதனத்தை தனபாலசிங்கம் சுரேஸ் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் தனபாலசிங்கம் சுரேஸ் எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(cs.61552) B (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### டிஜிற்றல் வசதிகளுடன்

# 'க்ளீன் சிறிலங்கா' மாதிரி நகரங்கள்

'க்ளீன் ஸ்ரீலங்கா' எனும் கருப்பொருளின்கீழ், சமூக ரீதியாகவும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் மேம்பட்ட டிஜிற்றல் சேவை வசதிகளுடன் கூடிய புதிய மாதிரி நகரங்களை உருவாக்குவதற்கான நவீன தேசியத் திட்டம் ஜனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, மொரட்டுவ பல்கலைக்கழகத்திடமிருந்து முழுமையான தொழில்நுட்ப உதவியைப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நகர வடிவமைப்பு தொடர்பான சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதற்காக, மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டி.கே. சித்துமினி ரத்னமலலவின் தலைமையில், 'க்ளீன் ஸ்ரீலங்கா' செயலணியின் பல செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் புலமையாளர்களைக் கொண்ட ஒரு விசேட நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இந்த மாதிரி நகரத் திட்டம் பௌதீக மேம்பாட்டுடன் மட்டும் நின்றுவிடாமல் மக்களை அறநெறியில் உயர்ந்த சமூகமாக மாற்றுவதற்கும் பொது மக்களுக்குத் தேவையான சேவைகளை உடனடியாகவும் வெளிப்படையாகவும் வழங்குவதற்காக நவீன தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் ஒரு விரிவான மின்னணுச் சேவை வலையமைப்பை நிறுவவும் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

(ச-இ)

**வீடு விற்பனைக்கு**

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி மத்திய கல்லூரி பாடசாலை வீதியில் அமைந்துள்ள நிலப்பரப்பு 3 உடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**077 534 2390, 077 497 6815**

**வேலணை மத்திய கல்லூரி - கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் கண்ணீர் அஞ்சலி**

எமது சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களான

**திரு ரவீந்திரன்** அவர்களின் மைத்துனரும்

**திரு ராஜ்தேவன்** அவர்களின்

மாமனாருமான

**அமரர் அருணகிரிநாதன் தர்மலிங்கம்**

**(எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்)**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி நிற்கின்றோம்.

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம், கொழும்பு, கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

குறிப்பு: கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)

**தொடர்பு:077 386 6250**

(CS 61268) J-1

## 3ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 06 • 04 • 1957

உதிர்வு 04 • 06 • 2023

**அமரர் சண்முகநாதன் விஜயலட்சுமி**


**திதி: பிரதமை**

அம்மா உனைப் பிரிந்து மூன்றாண்டுகள் ஆனதே. என்
அகிலமே இருண்டதே! ஆறுதல் சொல்ல யாரும் இல்லை,
உன் அன்பு மடிக்கு ஈடேதும் இல்லை! இன்பமாய் நீங்கள் பேசிய
நற்பேச்சுகள், இன்றும் என் காதுகளில் கேட்குதம்மா!
ஈன்றவள் என்னை மட்டுமன்றி ஏனைய பிள்ளைகளையும்,
உன்பிள்ளை போல் காத்தாயே! உயரிய பண்பால் அனைவரையும்
ஈர்த்தவளே, உனைத் தேடி என் கண்கள் ஏங்குதம்மா!
ஊரேபோற்ற சீரோடுஎனைவளர்த்த தாயே.
ஊமைச் சிலையாய் எனைத்தனியே விட்டுச்சென்றதேனம்மா
நீங்கள் இன்றிய வாழ்வு துடுப்பில்லா படகெனவே ஆனதுதாயே
ஏற்றமிகு தீபமாய் வழிகாட்டியவளே,
எனைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் அம்மா
ஐயம் தீர்த்து எனைத் தாங்கிய தாயே,
ஒரு கணமும் உங்கள்முகம் மறக்கவில்லை. அம்மா.
உங்களைத் தவிர எனக்கு வேறு கதியில்லை!
ஓயாமல் உங்கள் நினைவுகள் அலைமோதுதே. அம்மா.
உன் மகள் நெஞ்சம் கண்ணீரில் மூழ்குதே! என்றென்றும்
உங்களின் ஆசிகள் எங்களுக்குகிடைக்க காரைக்கால் விஸ்வநாதப்
பெருமானையும் சிவகாமித் தாயாரையும் வேண்டு கின்றோம்..

இல. 11 காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

[illegible]

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 01.10.1946 — மறைவு 30.05.2026

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சரவணை கிழக்கு பள்ளம்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

**தருமலிங்கம் அருணகிரிநாதன்**

அவர்கள்

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்)


தூய உள்ளத்துடன் பாரினில் பிறந்து பள்ளம்புல கிராம மக்களுக்கு அளப்பரிய சேவை செய்த சமூகசேவகனுக்கு எமது அஞ்சலிகள்.

**சரவணை பள்ளம்புலம் அருள் மிகு முருகமூர்த்தி திருக்கோவில்**

**அறங்காவற் சபையும், திருப்பணிச்சபையும், கூட்டுப்பிரார்த்தனைச்சபையும்**

(cs 61564 (N.1)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலியும் 70 ஆம் ஆண்டு அகவை தினமும்



தோற்றம் 30 • 05 • 1956

மறைவு 16 • 05 • 2022

கடந்த 16.05.2022 அபரபக்ஷ பிரதமை திதியில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

**அமரர் இராசா பொன்குமார்**

(உரிமையாளர் - ஐங்கரன் வெதுப்பகம் - கோப்பாய்,
ஐங்கரன் வெதுப்பகம் - தட்டாதெருச்சந்தி,
சரஸ்வதி விலாஸ் - கோப்பாய்)

விண்ணில் நீங்கள் கலந்தே - இன்று
நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்ததோ - அப்பா?
மண்ணில் நீங்கள் பிறந்திருந்தால் - இன்று
எழுபது அகவை நிறைந்திருக்குமே அப்பா...!

உங்களை நாங்கள் உயிராய் வைத்துள்ளோம்
ஆண்டுகள் நான்கு கடந்த போதும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நகரவில்லை!

தோள் கொடுத்து எமை வளர்த்த தோழனே!
வழிகாட்டி எமை நடத்திய குருவே!
உங்கள் கண்டிப்பின் பின்னே இருந்த பாசமும்.
உங்கள் புன்னகையின் பின்னே இருந்த தியாகமும்.
ஒவ்வொரு நொடியும் எங்களை வாழ வைக்கிறது!

பிறந்த நாளில் உங்களை வாழ்த்துவதா?
நினைவு நாளில் உங்களை வணங்குவதா?
வார்த்தைகள் இன்றி தவிக்கின்றோம் அப்பா....!

பூமியில் நீங்கள் வாழ்ந்த காலம் வரை
எங்களுக்கு குடையாய் இருந்தீர்கள்!
இன்று விண்மீனாய் மாறி - எங்களை
மேலிருந்து ஆசிர்வதிக்கிறீர்கள்......!

**உங்கள் நினைவுகளோடு வாழும்:**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல. [illegible] ஒழுங்கை,
[illegible].

(cs 61560) (N)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதித்துறையில்...

யாழ்ப்பாண உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றம் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அந்தச் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

யாழ்ப்பாண உயர்நீதிமன்றத்திலிருந்து பதுளை சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றத்துக்கு ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா இடமாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக எங்களது முழுமையான அதிர்ச்சியையும் நம்பிக்கையின்மையையும் வெளிப்படுத்துவதற்காக இந்தக் கடிதம் எழுதப்படுகிறது.

அலெக்ஸ் ராஜா கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். பதவியேற்ற ஒரு மாதத்துக்குள் (2026.05.31 முதல் நடைமுறைக்குவரும் வகையில்) அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது, அந்த இடமாற்றத்துக்குப் பின்னால் புறக்காரணங்கள் இருக்கலாம் என்ற சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

எங்களது உறுப்பினர்களிடமிருந்து நம்பகமான தகவல்களின் அடிப்படையில், வட மாகாண ஆளுநருக்கு எதிராக நீதிபதி சில உத்தரவுகளை வழங்கியிருந்தமையே இந்த இடமாற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம் என அறிகிறோம். அந்த வழக்குகளில் ஆளுநர் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டிருந்தார். (அந்த உத்தரவுகள் பின்னர் இரத்து செய்யப்பட்டதுடன், அவை நீட்டிக்கப்படவும் இல்லை.) மேலும், வடக்கு ஆளுநர் உங்கள் அரசாங்கத்தின் அமைச்சர் உட்பட சில அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தலையீட்டை நாடினார் என்றும் நாங்கள் நம்பத்குந்த முறையில் அறிந்துள்ளோம்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் நீதித்துறை அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் அதிகாரத்தை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். எனினும், நீதித்துறை அதிகாரிகளின் திடீர் மற்றும் விளக்கமற்ற இடமாற்றங்களும், அவற்றில் நிர்வாகத் துறையினரின் தலையீடும், நீதித்து றையின் மீதான மக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும் என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்வார்.

நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையீடு இடம்பெற்றதாக சிறிதளவு தோற்றமளிப்பதுகூட மிகக் கடுமையான விடயமாகும். நாட்டின் தலைவராக, இத்தகைய தலையீடுகளுக்கு எந்தவித சகிப்புத்தன்மையும் இருக்கக் கூடாது என்பதை உறுதிசெய்யும் பொறுப்பு உங்களுக்குள்ளது.

இந்த விடயத்தை மிக உயர்ந்த முன்னுரிமையுடன் விசாரிக்குமாறு வலியுறுத்துகிறோம். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நேரில்விளக்குவதற்காக உங்களைச் சந்திக்கும் வாய்ப்பையும் வழங்க வேண்டும் என்றும் கோருகின்றோம்- என்றுள்ளது. (அ-எ-26)

## தமிழர்...

ருந்தனர். 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடந்துகொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது. ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணத்திலிருந்த ஈழநாடு தினசரி அலுவலகமும், அதற்கு அருகிலிருந்த கடைகள் பலவும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது. அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது சிங்களப் பேரினவாத கும்பல் ஒன்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டு கொளுத்தியது. தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பலாகிப் போனது.

உலகில் வேறு எங்கும் இல்லாத நூற்றாண்டு பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் என மிகப் பெரிய எண்ணிக்கையிலான பொக்கிசங்களை யாழ்ப்பாண நூலகம் தன்னகத்தே கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் தனிப்பட்டவர்களிடமும் இருந்து வந்த பல நூல்கள், முக்கியமாக நூற்றாண்டுகள் பழமையான ஓலைச்சுவடிகள் போன்றவை இங்கு பத்திரப்படுத்தப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் பொது நூலகம் நள்ளிரவில் தீயிடப்பட்டபோது, அதை சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியில் இருந்து நேரில் பார்த்த தாவீது அடிகளார் அந்த கணத்திலேயே உயிரிழந்தார் என்பது அந்த நூலகத்தின் பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பு நடந்து இன்றோடு 45 ஆண்டுகள் கடந்துள்ளபோதும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் தண்டிக்கப்படவில்லை. தற்போது புதிய பூச்சுடன் யாழ்ப்பாணம் பொதுநூலகம்திறக்கப்பட்டிருந்தாலும், கடந்தகாலச் சம்பவம் தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத வடுவாக மாறியிருக்கின்றது. (அ-எ-26)

## பொதுநூலக...

நிகழ்வு இன்று மாலை 5 மணியளவில் பொதுநூலக முன்றலில் நடைபெறும் என்றும், நிகழ்வில் பொதுமக்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-66)

## தற்காலிக...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரு நாட்டை ஆட்சி செய்யும்போது இயற்கை பேரிடர்கள், பொருளாதார வீழ்ச்சிகள் மற்றும் கடந்த கால ஆட்சியாளர்களின் தவறான முடிவுகள் போன்ற உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின்போது, ஆட்சியாளர்களின் முறையற்ற நிர்வாகத்தால் பொது மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளானார்கள். தற்போதைய அரசு இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பில்லியன் கணக்கில் இழப்பீடுகளை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பியுள்ளது. தற்போது உள்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை மாற்றமானது உள்நாட்டுநிர்வாகத்தவறு அல்ல, மாறாக அது முற்றிலும் சர்வதேச காரணிகளால் உருவானது. சர்வதேச போர்ச் சூழலானது இலங்கை போன்ற நாடுகளை மட்டுமன்றி இந்தியா, வியட்நாம் மற்றும் சிங்கப்பூர் போன்ற வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளையும் கூடப் பாதித்துள்ளது.

பொதுமக்கள் இந்த தற்காலிக விலை மாற்றங்கள் குறித்து அச்சமடையத் தேவையில்லை. சர்வதேச சூழல் வழமைக்குத் திரும்பியவுடன் மக்களுக்கு சாதகமான விலையில் எரிபொருளை வழங்க அரசாங்கம் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்-என்றார். (அ-எ-இ)

## செம்மணிப்...

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் 12 நாள்கள் நடைபெற்று இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் 262 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், அவற்றில் 261 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தன.

12 நாள்களாக நடைபெற்ற மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகளில் 21 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அத்துடன் தடயப்பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கையின் இரண்டாம் கட்ட அகழ்வுகள் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ-எ-26)

## தீக்காயமடைந்த....

படுத்தியபோது, ஓலைகளில் எதிர்பாராத விதமாகத் தீப்பற்றியுள்ளது. அதன் போது அவர் தடுமாறி தீக்குள் வீழ்ந்த நிலையில், மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## தற்போதைய...

டின் தற்போதைய நிதி நிலைமை தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை ரூபாவை வலுப்படுத்துவதே எனது பொருளாதாரக் கொள்கையின் முதன்மை நோக்கமாக இருந்தது. தற்போதைய ஆட்சியாளர்களின் தொலைநோக்கற்ற கொள்கைகளால் நாடு மீண்டும் பெரும் பொருளாதார ஆபத்தை நோக்கி நகர்கின்றது. டொலரின் கட்டுப்பாட்டை அரசாங்கம் ஆரம்பத்திலேயே தவறவிட்டுள்ளது.

அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே டொலரின் மதிப்பை 280 ரூபா மட்டத்தில் தக்கவைப்பதற்கான முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. இன்று டொலர் 320 ரூபா வரை சென்றுவிட்டது. அதாவது 30 ரூபாவால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு கையிருப்புப் பற்றாக்குறை என்பது ஒரு நாட்டுக்கு ஏற்படும் மிகப்பெரிய வருமானப் பற்றாக்குறையாகும். இந்தப் பிரச்சினைக்கு மிக விரைவாகத் தீர்வு காணாவிட்டால் நாடு பேரழிவைச் சந்திக்கும்-என்றார். (அ-எ-இ)

## தற்காலிக...

நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் தற்காலிக நிவாரணங்களுக்கு அரசாங்கம் ஒதுக்கும் நிதி 100 பில்லியன் ரூபாவுக்குள் கட்டுப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சர்வதேச நாணய நிதியத்துக்கு உறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுக்கு ஜனாதிபதி அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தற்காலிக நிவாரணங்கள் அனைத்தும் வரும் செப்ரெம்பர் மாத இறுதிக்குள் படிப்படியாக நிறுத்தப்படும். நாட்டின் நிதி இலக்குகளை எட்டக்கூடியதாக இருந்தால் மட்டுமே 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தினூடாக மேலதிக உதவிகள் வழங்குவது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான நாணய நிதியத்தின் 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் இலங்கைக்கு உடனடியாக சுமார் 695 மில்லியன் அமெரிக்கடொலர்நிதிவிடுவிக்கப்படவுள்ளது. இதன்படி, இதுவரை இலங்கைக்கு கிடைத்துள்ள மொத்த நாணய நிதிய உதவி 2.4 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. (அ-எ-இ)

## இலங்கைக்கு...

இழந்த கிழக்கு மாகாண நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு வழங்கியுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஐ.பி.எல். 2026

# இரண்டாவது கிண்ணம் பெங்களூரின் வசம்!

அகமதாபாத், மே 31

**ஐ.பி.எல். தொடரில் குஜராத் டைட்டன்ஸை வீழ்த்தி தொடர்ச்சியாக இரண்டாவது முறையும் சாம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டது ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு.**

இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) 2026 தொடரின் இறுதிப் போட்டி நேற்று இரவு அகமதாபாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்றது. இதில், நடப்பு சாம்பியனான ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியும் குஜராத் டைட்டன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூரு அணித் தலைவர் ரஜத் படிதார் முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப விக்கெட்டுகளை விரைவாக இழந்தாலும், வொஷிங்டன் சுந்தர் அரைச்சதம் அடித்து அணியை சவாலான இலக்குக்கு கொண்டு சென்றார். பெங்களூரு தரப்பில் ரசிக் சலாம் தார் 3 விக்கெட்டுகளையும், ஜோஷ் ஹேஸில்வுட் மற்றும் புவனேஸ்வர் குமார் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 156 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பெங்களூரு அணிக்கு விராட் கோலி அதிரடியான தொடக்கத்தை வழங்கினார். வெங்கடேஷ் ஐயருடன் இணைந்து வேகமாக ஓட்டங்களைச் சேர்த்த அவர், வெறும் 25 பந்துகளில் அரைச்சதம் பூர்த்தி செய்து இறுதிப் போட்டியில் தனது அதிவேக ஐ.பி.எல். அரைச்சதத்தை பதிவு செய்தார். இடைக்கிடையே விக்கெட்டுகள் சரிந்தபோதிலும், கோலி மற்றும் நடுப்பகுதி வீரர்கள் அணியை வெற்றிப்பாதையில் வைத்தனர்.

இறுதியில் இந்த வெற்றியின் மூலம் பெங்களூரு அணி தனது இரண்டாவது ஐ.பி.எல். பட்டத்தையும், தொடர்ச்சியான இரண்டாவது சாம்பியன் பட்டத்தையும் உறுதிப்படுத்தியது. அதேவேளை, இரண்டாவது முறையாக கிண்ணத்தை வெல்லும் நோக்குடன் களமிறங்கிய குஜராத் டைட்டன்ஸ் அணி இறுதியில் ஏமாற்றத்துடன் தொடரை முடித்தது. (எ)



**ஆண் வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடைக்கு ஆண் வேலையாள் தேவை.
சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் 60,000/- - 70,000/- வழங்கப்படும்.
மாதத்தில் 4 நாட்கள் விடுமுறை

**077 937 0000, 075 988 1000**

**உடனடி காணி விற்பனைக்கு**

களுக்காவத்தை அல்வாய் மேற்கு, அல்வாயில் இளம்பிறை வாசிக சாலை வீதியில் 2 பரப்பும் 7 குழியும் உள்ள, நல்ல அயற் சூழலை கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**076 148 7678**

(CS 12168) A

# கண்ணீர் காணிக்கை



உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார் (யோவான் 11:25)

## ஸ்ரெல்லா துரைசாமி

ஏழாலை தெற்கு சூராவத்தையை பிறப்பிடமாகவும், திருக்குடும்ப கன்னியர் மடத்தின் அருட் சகோதரியாக பணியாற்றி வந்த அருட்சகோதரி ஸ்ரெல்லா துரைசாமி அவர்கள் (29.05.2026) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியன் துரைசாமி - நவமணி தம்பதியரின் அன்பு மகளும், நேசராணி, பத்மினி காலஞ்சென்ற ஜெயசீலன், மற்றும் ஜெயபாலன், ஜெயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அத்தானஸ் பாக்கியநாதன், யேசுதாசன் பாலா மற்றும் வசந்தி, யோகராணி, றதினி ஆகியோரின் மைத்துனியும், துஷி, கிரிஷா, மானல், பிரவின், மினோஜ், நிலு ஆகியோரின் அன்ராவும், பிரியா, கஜன், டிலாந்தி, சுஜீவன், றெக்னோ, ஹர்சினி, அன்ட்ரு, லக்சன் மற்றும் டெஸ்மன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதி திருப்பலி இன்று (01.06.2026) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் (பெரிய கோயில்) ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். அருட் சகோதரியின் ஆத்மா நித்திய இளைப்பாறுதல் அடைய இறைவனை பிர்த்திக்கின்றோம். நித்திய இளைப்பாற்றினை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே முடிவில்லாத ஒளி அவர்மேல் ஒளிர்வதாக சமாதானத்தில் இளைப்பாறுவராக.

தொடர்புகளுக்கு:
ஜெயக்குமார் (தம்பி)
074 323 2579
சூராவத்தை, சுன்னாகம்

தோற்றம்
09.10.1947

மறைவு
29.05.2026

தகவல் :
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.